இயக்கவூர்தி விபத்து கோரிக்கை தீர்ப்பாயம், நாகப்பட்டினம்

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.

**MCOP.No.64/2025 ம.சா.1**

| | |
|---|---|
| பெயர். திரு. பாஸ்கரன் | த/பெ. வடிவேல் |
| கிராமம். நீர்முளை | Age: 45 |
| நாள்.27.03.2026 | தொழில். -- |
| நம்பர். 9159804098 | |

**2026 –ஆம்** ஆண்டு **மார்ச்** மாதம் **27–**ந்தேதி **வெள்ளிக்கிழமை** Act X of 1973 ஆண்டின் சட்ட விதிப்படி **திரு. G. கிருஷ்ணன், பி.ஏ., எல்எல்.பி.,** தலைமை நீதித்துறை நடுவர் நாகப்பட்டினம், ஆகிய என் முன்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் உண்மை என கூறப்பட்டவைதான். எனவே நான் தாக்கல் செய்த முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை சாட்சியமாக பாவித்துக்கொள்ள வேண்டுகிறேன். வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு **மனுதாரர் தாக்கல்** செய்த முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலம் **மசா.1ன்** முதல் விசாரணையாக அனுமதிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ. 1 | 07.11.2024 | முதல் தகவல் அறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ. 2 | 05.11.2024 | நாகப்பட்டினம், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நான் முதலுதவி சிகிச்சை பெற்றதற்கான காயம் குறித்த கருத்துரை ஆவணம் | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.3 | 05.11.2024 | நாகப்பட்டினம், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நான் முதலுதவி சிகிச்சை பெற்றதற்கான விபத்து பதிவேட்டு ஆவணம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ. 4 | 09.11.2024 | தஞ்சாவூர் A to Z என்ற தனியார் மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றதற்கான விபத்து பதிவேட்டு ஆவணம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | 28.12.2024 | தஞ்சாவூர் A to Z என்ற தனியார் மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6 | 10.12.2024 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ. 7 | -- | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.8 | -- | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.9 | -- | எனது ஆதார் அடையாள அட்டை (அசலுடன் சரிப்பார்க்கப்பட்ட நகல். அசலை திரும்ப பெற்றுக்கொண்டேன். ) | நகல் |
| மசாஆ.10 | -- | எனது எனது வங்கி கணக்கு புத்தகம். | நகல் |

| | | | |
|---|---|---|---|
| மசாஆ.11 | 22.02.2025 | Best Medical Centre திருத்துறைப்பூண்டியில் நான் சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டதற்கான டிஸ்சார்ஜ் சம்மரி | அசல் |
| மசாஆ.12 | 21.03.2025 | Best Medical Centre திருத்துறைப்பூண்டியில் நான் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ சீட்டுகள். | அசல் |
| மசாஆ.13 | -- | பல்வேறு தேதிகளில் தஞ்சாவூர் A to Z என்ற தனியார் மருத்துவமனையிலும் மற்றும் Best Medical Centre திருத்துறைப்பூண்டியிலும், நான் சிகிச்சை பெற்றதற்கான எனக்கு ஏற்பட்ட மருத்துவ செலவுகளுக்கு உண்டான மருத்துவ ரசீதுகள் (148 எண்ணிக்கை) ( ரூ.5,20,066/-)<br>(2ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனைக்கு உட்பட்டு மருத்துவ ரசீதுகள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ) | அசல் |
| மசாஆ.14 | -- | பல்வேறு தேதிகளில் தஞ்சாவூர் A to Z என்ற தனியார் மருத்துவமனையிலும் மற்றும் Best Medical Centre திருத்துறைப்பூண்டியிலும், நான் சிகிச்சை பெற்றபோது எனக்கு எடுக்கப்பட்ட CT Scanகள் (9எண்ணிக்கை) | அசல் |

| | | | |
|---|---|---|---|
| மசாஆ.15 | -- | பல்வேறு தேதிகளில் தஞ்சாவூர் A to Z என்ற தனியார் மருத்துவமனையிலும், Best Medical Centre திருத்துறைப்பூண்டியிலும் மற்றும் SP Ortho Nagapattinam மருத்துவமனையிலும் எனக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படங்கள் (7 எண்ணிக்கை) | அசல் |
| நீமசாஆ.1 | -- | என்னை நாகப்பட்டினம் மாவட்ட மருத்துவ குழுவால் பரிசோதனை செய்து எனக்கு ஏற்பட்ட காயங்களின் ஊனத்தின் தன்மை 20% பகுதி ஊனம் என்று வழங்கப்பட்ட ஊன மதிப்பீட்டு சான்றிதழ் | அசல் |

**மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை.**

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது வயது, வருமானம் மற்றும் தொழில் ஆகியவற்றை காட்டுவதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் டீ குடிப்பதற்காக சாலையின் குறுகே நடந்து சென்றபோது இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். வாகனம் வருவதை கவனிக்காமல் நான் சாலையின் குறுக்கே நடந்து சென்றததால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் நான் தாக்கல்

செய்த மசாஆ.1றான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சாலையின் குறுக்கே வாகனம் வருவதை கவனிக்காமல் நான் சென்று விபத்து ஏற்படுத்திக்கொண்டதால், இந்த விபத்திற்கு எனது கூட்டுபங்களிப்பும் காரணம் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இந்த விபத்தில் ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் முழுமையாக குணமாகிவிட்டது என்றும், இழப்பீடு அதிகப்படி பெறவேண்டி நிரந்தர ஊனம் ஏற்பட்டதுபோல தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எனக்கு ஏற்பட்ட விபத்து காயங்களுக்கான சிகிச்சைக்கு ஏதேனும் காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் பணம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை.

நான் அதிகப்படியான இழப்பீடு பெற வேண்டி மருத்துவ செலவினங்களுக்கான ரசீதுகளை மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்மீது மோதிய இருசக்கர வாகனத்தின் ஓட்டுனருக்கு விபத்து சமயத்தில் முறையான, ஓட்டுனர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரிதான். அதனால் நான் கோரியுள்ள இழப்பீட்டினை 2ம் எதிர்மனுதாரர் செலுத்த கடமைப்பட்டவர் அல்லார் என்றும், நான் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்துதான் இழப்பீடு பெறதக்கவர் என்றும் சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டுத்தொகை அதிகப்படியானது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.03.27 16:41:47 +0530